RBI/2004/136

DCM (RMMT)No.1181/11.37.01/2003-04 ஏப்ரல் 05, 2004

தலைவர் & நிர்வாக இயக்குநர்
பொது/தனித் துரை வங்கிகள்

அன்புடையீர்,

<u>நாணயங்கள் ஏற்றுக் கொள்ளுதல்</u>

2003 அக்டோபர் 09 தேதியிட்ட DCM (RMMT)No.404/11.37.01/ 2003-04 இன்படி, எந்தவிதக் கட்டுப்பாடோ நிபந்தனையோ இன்றி பொதுமக்களிடமிருந்து நாணயங்களை அனைத்து வங்கிக் கிளைகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தோம். நேரடியாகவும் மறைமுகமாகவும் இன்னமும் பல வங்கிக் கிளைகள் அப்படி நாணயங்களை மக்களிடமிருந்து வாங்க மறுப்பதாக பல புகார்கள் வருகின்றன.
வங்கிகளே இப்படிவாங்க மறுப்பது வணிகர்களையும் கடைகாரர்களையும் மக்களிடமிருந்து நாணயங்களை வாங்க மறுக்க வைக்கிறது. இதனால் பொதுமக்கள் பல இனனல்களுக்கு ஆளாகின்றனர். சில்லறை நாணயங்களை வாங்க மறுக்கும்போதோ அல்லது கொடுக்கும்போதோ வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் தகராறு ஏற்படுகிறது. எனவே மீண்டும் ஒரு முறை உங்கள் கிளைகள் அனைத்திற்கும் நாணயங்களை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

2. ஏற்கனவே சொல்லியுள்ளபடி நாணயங்களைக் குறிப்பாக சில்லறை நாணயங்களை எடை பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும். வாடிக்கையாளனுக்கும் காசாளனுக்கும் 100 ஒரே மதிப்புடைய நாணயங்கள் கொண்ட பிளாஸ்டிக் பைகளாக வாங்குவது வசதியாக இருக்கும். பிளாஸ்டிக் பைகள் முகப்புகளில் வாடிக்கையாளர் வசதிக்காக வைத்திருத்தல் வேண்டும். இத்தகைய வசதி கிளையில் இருப்பது பற்றிய அறிவிப்பும் வங்கியின் அறிவிப்பும் பலகையிலே எழுதலாம். வாடிக்கையாளரை நூறு நூறு நாணயங்களாகவும் (மதிப்பிலும் உலோகத்திலும் ) பிரித்து பிளாஸ்டிக் பைகளில் போட்டு தரச் சொல்லலாம். ஆனால் வற்புறுத்தக்கூடாது. நடப்பில் உள்ள 25, 50 பைசாவுக்கும், 1, 2, 5 ரூபாய்களுக்கும் இதுபோல் செய்யலாம்.

மிகப்பெரிய அளவில் எடையில் வேறுபாடு இருந்தால் நாணயங்களை எண்ணும் இயந்திரங்களைப் பயன்படுத்தலாம். 10 பைசா நாணயங்களையும் பழைய 25, 50 பைசா 1ரூபாய் நாணயங்களையும் நாணயங்கள் அச்சிடும் ‘மிண்ட்’ டுக்கு அனுப்பலாம். எவர்சில்வர் 25 பைசா 50 பைசா 1ரூபாய் நிக்கல் உலோகத்தாலான ரூபாய் 2,5 நாணயங்களை மீண்டும் புழக்கத்தில் விட வேண்டும். கொள் அளவுக்கு அதிகமாக இத்தகைய நாணயங்கள் சேர்ந்து விட்டால் அருகில் உள்ள ரிச்ர்வ் வங்கிக் கிளையை அணுகலாம்.

3. வட்டார/பகுதி மேலாளர்கள் முன்னறிவிப்பின்றி தீடிரென்று கிளைகளுக்குச் சென்று, நாணயங்கள் ஏற்றுக் கொள்வது சம்பந்தமாக அவர்கள் கொடுக்கும் செயலாக்க அறிக்கையின் உண்மைத்தனத்தைக் கண்டறிந்து தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும். இவர்கள் அளிக்கும் அறிக்கையைத் தலைமை அலுவலகம் பரிசிலித்து தேவையான தக்க முடிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

4. இவ்வறிவுரையை ஏற்றுச் செயல்படுத்தாமலிருத்தல் என்பது ரிச்ர்வ் வங்கியின் கட்டளைகளை மீறிய செயலாகக் கருதப்படும் என்று அறிவுறுத்துகிறோம்.

கிடைத்தமைக்கு ஒப்புதல் அளித்து, செயலாக்கத்திற்கு தகவல் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் நம்பிக்கையுள்ள

P.K. பிஸ்வாஸ்
செயல் இயக்குநர்

## <u>வங்கி முகப்புகளில் நோட்டுகளை எண்ணும் இயந்திரங்கள்</u>

DCM (Plg)No.874/10.36.00/2003-04 ஜனவரி 29, 2004

தலைவர் & நிர்வாக இயக்குநர்
ஸ்டேட் வங்கி / அதனுடன் சேர்ந்த வங்கிகள்
நாட்டுடமையாக்கப்பட்ட / தனியார் / அயல்நாட்டு
பிராந்தியக் கிராமப்புற / உள்ளூர் வங்கிகள்

அன்புடையீர்,

## <u>வங்கி முகப்புகளில் நோட்டுகளை எண்ணும் இயந்திரங்கள்</u>

1949 வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் பிரிவு 35A யின் கீழ் 2001 நவம்பர் 7 ஆம் தேதியிட்ட DBOD.No.Dir.BC 43/13.03.00/2001-02 கட்டளைப்படி அனைத்து வங்கிக் கிளைகளும் 'பின்' அடிக்காத நோட்டுகளை வாங்க/கொடுக்க வேண்டும். இரண்டு பக்கமும் எண்கள் தெரிவது போல் உள்ள நோட்டுக்கள் எண்ணும் இயந்திரங்களைத் தேவையான அளவு வாங்கி கிளைகளில் முகப்புகளில் வைக்க வேண்டும் என்று அவ்வப்போது அறிவித்து வருகிறோம். மக்களுக்குக் கொடுக்கப்படும் நோட்டுக்களின் எண்ணிக்கையை, முகப்புகளின்முன் நின்று வாங்கும்போது அவர்களே பார்த்துக் கொள்ள, இரண்டுப்பக்கமும் எண்கள் தெரிவதுபோல் உள்ள நோட்டுக்கள் எண்ணும்இயந்திரங்கள் பயன்படும்.

2. பல கிளைகளில் இவ்வாறான இயந்திரங்கள் இல்லாமல் இருப்பது பற்றி பல புகார்கள் வருகின்றன. எனவே, மக்கள் மனதில் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் நோட்டு எண்ணும் இயந்திரங்களை தேவையான அளவில் கிளைகளில் வைக்க வேண்டும். அவைகளில் நோட்டுகளின் எண்ணிக்கை காசாளருக்கும் வாடிக்கையாளருக்கும் தெரியும் வகையில் அமைந்திருத்தலும் வேண்டும்.

3. கிடைத்தமைக்கு ஒப்புதல் அளிக்க

அன்புடன்
V.R. கெய்த்வாடு
தலைமைப் பொது மேலாளர்

Ref. No. CO. DT. /13.01.272/2002-03 ஜுலை 17, 2002

மண்டல இயக்குநர்கள், கிளை அலுவலகங்கள்
ஸ்டேட் வங்கி / அதனுடன் சேர்ந்த வங்கிகள்
18 நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள்
4 தனியார் வங்கிகள் SCHIL

அன்புடையீர்,

**முன்னர் வெளியிடப்பட்ட துயர்நீக்கப் பத்திரங்களை மாற்றுதல்**

முதிர்வு நிலையை அடயாத, 2002 மார்ச் 1 அம் தேதிக்கு முன்னர் வெளியிடப்பட துயர் நீக்கப் பத்திரங்களை, இரண்டாவது சந்தையில் வாங்குவது என்பது, புதிய முதலிடாகக் கருதாமல் , முதலிட்டாளர் ஓருவருக்கு, ஆண்டு ஓண்றுக்கு, முதலிட்டுக்கான உச்ச வரம்பான ரூ. 2 லட்சத்திற்குள் சேர்துக்கொள்ளப்படக் கூடாது என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம். என்வே முதலீட்டார்கள் தங்களது நபர் ஓணறுக்கு ஆண்டு ஓன்றுக்கு ரூ. 2 லட்சத்திற்கான முதலீடு என்ற வரம்பையும் தாண்டி ஏவ்வளவு தொகைக்கு வேண்டுமானாலும், இரண்டாவது சந்தையில், முன்னர் வெளியிட்ட துயர்நீக்கப் பத்திர் ங்களை வாங்கிக் கொள்ளலாம். கிளைகளிலை தேங்கிக் கிடக்கும் மாற்றுதலுக்கான கோப்புகள் உரிய வகையில் தீர்வு காணப்படாலாம்.

உண்மையுள்ள,

ஓப்பம்
அர். சி. தாஸ்
பொது மேலாளர்